# மானிப்பாய் இந்துக் கல்லூரி

# பவளவிழா வெளியீடு

# கல்லூரியின் கதை!

[ கிராமீயக் காவியம் ]

ஆக்கியோன்:

" இயலிசைவாரிதி " " ஸாஹித்ய சிரோமணி " " கவிமஜமணி "

**பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர்**

*[ விரிவுரையாளர், ஆசிரிய கலாசாலை, கோப்பாய். ]*


மானிப்பாய் இந்துக் கல்லூரி

பழைய மாணவர் சங்க

வெளியீடு

*1-6-1986*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இக்கவிதை தொகுதியை வெளியிடுவதற்கு

காரணகர்த்தாவாக இருந்தவரும்

பழைய மாணவனும்

முன்னாள் மா. இ. க. அதிபரும்

ப. மா. சங்கத் தலைவரும்

ஆகிய

**அமரர் க. முத்துவேற்பிள்ளை**

அவர்களுக்கு

இத் தொகுதியை

பணிவன்புடன்

**சமர்ப்பிக்கின்றோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
மருதடி விநாயகன் துணை

# மானிப்பாய் இந்துக்கல்லூரியின் கதை

( கிராமியக் காவியம் )

காப்பு
மருதடி விநாயகர் துதி
[ விருத்தம் ]

பொன்னணி மகுடம் மின்னப்
பொலிநிறை வதனந் தன்னில்
புன்னகை அருளும் பூப்பப்
புகழ்மலி பாரதத்தை
வன்னவோர் மருப்பொ சித்து
வரைதனில் வரைந்த செம்மல்
மன்னிடு மானிப் பாயின்
மருதடிக் கணேசன் காப்பாம்.

வேலக்கை முருகன் துதி
[ விருத்தம் ]

வெற்றிதரு வேலைக்கையில் விளங்கிடவே ஏந்தி அன்பர்
பற்றிடவே பொன்னடிகள் பரிந்திடவே தந்தருள்வான்
எற்றிசையும் ஏத்து புகழ் எழில்மானி யம்பதியில்
சுற்றிடுவார் போற்றுகுகன் பொற்கழல்கள் போற்றிசெய்வாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் இந்துக்கல்லூரியின் கதை

## நூற்துதி

(தெம்மாங்கு)

வேழமுகன் கணபதியை
வேண்டுகிறேன் செந்தமிழாம்
ஆழிக்கடல் குதித்தெடுத்த
அழகு முத்துக் கவிதை சொல்ல
ஆழமுத்துக் கவிதையிலே
அன்பொழுக நானும் இந்த
வேளையில்மா னிப்பாய் இந்து
விளங்கிடு கல்லூரித் தாய்க்கு. 1

ஆரமாக நான் தொடுத்தே
அவள் பாதம் சூட்டிடுவேன்
தாரணியில் கல்லூரித் தாய்
தண்ணருளும் தந்திடுவாள்
பூரணமாய் மானிப் பாயில்
பொலி இந்துக் கல்லூரியின்
காரணமாம் கதையதனைக்
கவிதையிலே சொல்லிடுவேன். 2

திருவடி தாருமையா
தீந்தமிழ்க் கவிதை சொல்ல
மருதடி வாழும் சித்தி
மதக்கரி முகனே அன்பாய்
மருவினேன் உந்தன் பாதம்
மானியம் பதியிற் கல்வி
தரும் இந்துக் கல்லூரியாம்
தாயவளின் மனம் குளிர. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் துதி )

தாமரை மலரும் வாவித்
தடாகம் சூழ் ஆனைக்கோட்டை
மாமலர்ப் பதியில் வாழும்
மூத்தவி நாயகரே !
பாமலர் பாடிடவே
பரிந்தருள் தாருமையா !
நாமகள் வாழும் இந்துக்
கல்லூரிக் கதையைச் சொல்ல. 4

( வேலக்கைப்பிள்ளையார் துதி )

வேலைக்கையில் ஏந்தி மயில்
விளையாடும் முருகா வேதம்
நாலைக்கையில் ஏந்தும் வாணி
நாமகள் வாழும் அந்தக்
கோலத்தை மானிப் பாயில்
கோயில்கொண்டு விளங்கும் இந்து
சீலக்கல் லூரிக்காதை
செப்பிடவே நீ அருள்வாய். 5

( நவாலி அட்டகிரி முருகன் துதி )

அட்டமா சித்தி யாவும்
அழகுறத் தரும் நவாலி
அட்டகிரி அமர்ந்துறையும்
ஆறுமுக வேலா வாராய்
இட்டமாய் மானிப் பாயின்
இந்துக்கல் லூரித் தாயின்
கட்டழகுக் கதையைக் கூறக்
கந்தனே அருள் தருவாய். 6

( சுதுமலை புவனேஸ்வரியம்பாள் துதி )

அம்மா பராசக்தி !
அகிலாண்ட நாயகியே !
இம்மாநி லந்தனிலே
இலங்குசுது கிரி புரத்தில்
பெம்மான் சிவன் மருவும்
புவனேஸ் வரித் தாயே !
நம்மானிப் பாயிலங்கும்
நல்விந்துக்கல் லூரிக்கருள். 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயவள் சரிதை சொல்லித்
　　தண்டமிழ்க் கவிதை பாட
நீயே இரங்கிடுவாய்
　　நீலாய தாக்ஷி யம்மா !
மாயவனின் சோதரியே !
　　மால் மருகன் தாயவளே !
ஆயகலை அனைத்தும் நல்கும்
　　அழகு இந்துக் கல்லூரியாம். 8

அன்னை மனம் குளிர்ந்திடவே
　　அவள் கதையை நானுரைப்பேன்
கன்னல் தமிழ் அமுதக்
　　கவிதையிலே அவள் சரிதை
பன்னி அவள் புகழைப்
　　பக்தியாய் நான் பாடிடுவேன்
என்னகுறை யிருந்தாலும்
　　எந்தாயே பொறுத்தருள்வாய். 9

## ( வாணி துதி )

தாயே ஸரஸ்வதியே !
　　தண்ணருளும் தாருமம்மா !
நீயேவந் தென்நாவில்
　　நிறைந்திருப்பாய் வாணியம்மா !
ஆய கலைகள் தரும்
　　அன்னை வளர் மானிப் பாயின்
தூய இந்துக் கல்லூரித் தாய்
　　துலங்கு கதை கூறிடுவேன். 10

## ( அவையடக்கம் )

ஞானம் கல்வி அறிவு தந்தே
　　ஞாலமதில் எனை வளர்த்தாய்
மோனமிகு கல்வி கலை
　　மோகனமாய் தந்த தாயே !
நானும் உந்தன் குழந்தையம்மா !
　　நற்றமிழும் மழலையம்மா !
கானத் தமிழ் குதலை தந்தே
　　கழலடிகள் பிடித்தேனம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரித் தாயவளே!
கல்வி கலை தந்தவளே!
பல்லூழி காலம் வாழப்
பாட்டிசைப்பேன் பைந்தமிழில்
எல்லோரும் வாழ்ந்திடவே
எழிற் றமிழ்ப் பண்புகளை
நல்லாசி யோடு தமிழ்
நாடகத்தில் தந்தவளே! 12

## ( நூல் )

பொன்னிலங்கை நாட்டினிலே
புகழ்மிகும் யாழ்ப்பாணம்
சென்னியென ஈழமாதா
செப்பிடுவாள் பாட்டினிலே
மன்னு தமிழ் ஈழமென்னும்
மாதா நுதல் எனவே
மின்னிடும் மானிப் பாயாம்
மிளிரும்திரு வூர் இதுவே. 13

மாதாலங்கை நெற்றியிலே மங்களத் திலகமாக
மானி இந்துக் கல்லூரியாள் மங்களமாய் இலங்கிடுவாள்
வேதாகமங்கள் போற்றும் வேதவல்லி ஸரஸ்வதியும்
பாதாரம் தந்து அருள் பாலித்திட வந்துறைவாள். 14

வாணி ஸரஸ்வதியும்
வந்துறையும் அருளும் பெற்ற
மானி இந்துக் கல்லூரியாள்
மலர்ந்த கதை கேளுமையா!
காணி நிலங்கள் தந்த
கனவான்கள் மனம் குளிர்ந்தார்
பேணிக்கலைக் கோயில் செய்யப்
பெரியோர்கள் வந்தாரையா! 15

எங்களது பாக்கியமோ?
எழிற்பதி மானி நகர்
மங்களமாய்ப் பொலிந்திடவே
மலர்ந்ததொரு புண்ணியமோ?
சங்கரப் பிள்ளை என்னும்
சற்குணன் வந்துதித்தான்
பொங்கும்கலைச் சேவை தன்னை
பொலிவுடனே ஆற்றிடவே. 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலாயுத பிள்ளை என்னும்
வேளாண் குலக் கொழுந்து
சீரார்சங் கரப்பிள்ளைச்
செல்வனவன் மானிப்பாயாம்
ஊரார் புகழ்ந்து போற்றும்
உயர் சேவை செய்துவிட்டான்
பாரோர் புகழ்ந்து போற்றப்
பள்ளிக்கூடம் செய்தமைத்தான். 17

சைவம் தழைத்திடவே
சமரஸம் நிலவிடவே
தெய்வம் அருள் தரவே
தெய்வீகத் தமிழ் வளர
வையகம் தனிலே கல்வி
வளர் கலை பெருகிடவே
தையலிந்துக் கல்லூரியாம்
தாயவளும் உதித்தனளே! 18

மானிப்பாய் இந்துக்கல்லூரி அத்திபாரக்கல் நாட்டுவிழா

1910 ஜூலை 4 ந் திகதி பி. ப. 7.00 மணி

(ஒயில் கும்மி)

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பத்தாம் ஆண்டு — மாதம்
ஆடித்திங்கள் நாலு மாலை ஏழுமணிக்கு
தூய நெஞ்சம் படைத்தகல்வித் தொண்டர்கள்சூழ — கமழ்
தூபதீப ஆராதனை செய்துமே அன்பர். 19

வாசலில் வாழைகள் கட்டிவைத்தார் — தெங்கு
வண்ணக் குலைகளும் கட்டிவைத்தார்
பூசிடும் சந்தனம் கும்பாவிலே — பன்னீர்
பூரஸமிட்டுக் குழைத்து வைத்தார். 20

குத்துவிளக்குகள் ஏற்றிவைத்தார் — நிறை
கும்பங்கள் குங்குமம் கொண்டு வைத்தார்
முத்துச் சரங்களும் தொங்கவிட்டார் — பந்தல்
முன்றில் நிறைகுடம் முன்புவைத்தார். 21

மாவிலை தோரணம் மாட்டிவைத்தார் — பந்தல்
மாலைகளாலே அலங்கரித்தார்
நாவினில் வாணியைப் பாடிநின்றார் — அவள்
நல்லருள் வேண்டித் துதித்து நின்றார். 22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சளில் பிள்ளையார் செய்துவைத்தார் — அவர்
மலரடி வாழ்த்தியே பூஜை செய்தார்
கஞ்சமலர் வாணி தஞ்சமென — இந்துக்
கல்லூரி அடிக்கல் நாட்டிடவே 23

வேறு

கல்விமான்கள் வெள்ளைக் காற்சட்டைகோட்டுடன்
கப்பிரவெண் தலைப்பாவணிந்தே
செல்வியாம் வாணிக்கு கோயில்செய்ய வந்தே
சேர்ந்தவர் பக்தியாய்க் கூடிநின்ருர். 24

காணிவழங்கிய கனவான்கள் யாவரும்
களிப்பினுல் ஆனந்தக் கண்ணீர்மல்க
வாணியின் கோயிலாய் வண்டமிழ்வாயிலாய்
வளரிந்துக்கல்லூரி வாழ்த்தி நின்ருர். 25

## மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அத்திபாரம் இடல்

### (தெம்மாங்கு)

நெற்றியிலே நீறிலங்க
நெடுந்தலைப்பா தலையில் கட்டி
எற்றிசையும் ஏற்றிடவே
எழிற்பதியாம் மானிப்பாயில்
கற்றவரும் மற்றவரும்
காதலுடன் கூடிநின்றே
உற்றபணி இதுவெனவே
உயர்ந்த தமிழ்ப் பண்புடனே. 26

வெட்டினராம் அத்திபாரம்
விளங்கு கலைக் கோயில் செய்ய
கொட்டினராம் நவரத்னக்
கோமேதகப் புஷ்பராகம்
கட்டித் தங்கம் வைரமுடன்
கனத்த சங்குக் காசுடனே
இட்டமுடன் நவதானியம்
இன்புறவே இட்டபோது. 27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

ஞானந்தனை வளர்க்கும்
ஞானவாணி கலைமகளும்
கானந்தனைப் பாடிக்
களித்துவீணை மீட்டினளாம்
வானந்தனில் இருந்து
வானவர்பூச் சொரிந்தனராம்
ஆனந்தக் கண்ணீரும்
ஆறுய்ப் பெருகிய தாம் 28

மருதடிப் பிள்ளையாரும்
மகிழ்ந்தங்கு வந்தமர்ந்து
திருவருள் புரிந்த கதை
தேகம் சிலிர்க்குதையா!
முருகனும் வந்தானங்கு
முகமலர்ந்தருள் புரிந்தான்
திருவொடு வாணியுறை
திகழும் கலைக் கோயில்செய்ய. 29

கோவில் மணிகள் எல்லாம்
கோகில வாணியம்மைக்
கோவில் பிறந்த தெனக்
கொண்டேத்தி ஒலித்தனவாம்
பூவில் புகழ் ஓங்கும்
புண்ணியவூர் என்ற மானிப்
பாயில் எழுந்ததையா
பண்பு மிகும் கலைக்கோயில். 30

காலில் சிலம்பொலிக்க
கைவளை யாபதியும்
நூலில் சிந்தாமணியும்
நுண்ணிசையில் மேகலையும்
காதில்குண் டலம்மின்னக்
கன்னித்தமிழ் அணங்குமானிப்
பாயில் இந்துக் கல்லூரி
படைத்தவரை வாழ்தினளே. 31

செந்தமிழும் சைவமதம்
செகமீதில் வளர்ந்தோங்க
வந்த திந்துக் கல்லூரி
வளமானிப் பாய்நகரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைந்தமிழர் பண்பு காக்கும்
பள்ளிதனைப் படைத்த அந்த
நந்தமிழ்க் கனவான்களை
நாமகளும் வாழ்த்தினளே. 32

எத்தனை எத்தனை கனவான்களை
எழிற்பெறத் தந்தது மானிநகர்
சித்தமதில் உயர் கல்விமான்கள்
சீர்பெறத்தந்தது மானிநகர்
முத்தமிழ்வல்லோர் மூதறிஞர்கள்
முழுமையாய்த் தந்தது மானிநகர்
வித்தகர் கவிஞர் கலைஞர்களை
விளங்கத் தந்ததுமானிநகர். 33

தெம்மாங்கு

ஆயிரத்து எண்ணூற்றி முப்பத்திமூன்றில்
அரசசபைச் சட்டயாப்புச் செய்தபெரியார்
தூயதமிழ் மானிநகர் தந்தசெம்மல்
தொண்டர் குமாரசாமிப்பிள்ளை என்னும்பெரியார்
ஆயகலைக் கல்வியொடு தமிழும்சைவம்
ஆங்கிலமும் வளர்க்க ஆசைகொண்டமுதல்வர்
நேயமுடன் ஈன்ற முத்துக்குமாரசாமி
நீணிலத்தில் ''நைற்வீரன்'' பட்டம்பெற்றான். 34

இங்கிலாந்தில் விக்டோறியா நீதிமன்றம்
இவர்இருந்து அலங்கரித்த ஒருமன்றம்
எங்கும்புகழ் கலைமணக்க இனியநூல்கள்
எழுதிஇந்த பூவியக்கத்தந்த கலைஞன்
மங்காப்புகழ் ஆனந்தக் குமாரசாமி
மானிநகர் ஈன்றுதந்த கலாவித்தகன்
பொங்குபுகழ் பூத்தகலைக் கல்விமான்கள்
பொலிந்திலங்கி வாழ்ந்தநகர் மானிப்பாயே. 35

மேலைநாட்டு நாகரீகமோகம் வந்ததாம்
மேவும் ஆங்கிலேயப்பண்பு மேலெழுந்ததாம்
சிலமேவும் செந்தமிழர் பண்புயாவுமே
சீர்குலையலாமோஎன திரண்டெழுந்தனர்
காலமெல்லாம் கன்னல்தமிழ் கனிசுவைத்தவர்
காசினியில் செந்தமிழின் கனியைஉண்டவர்
கோலங்கண்டு சைவம்தமிழ் பேணிநின்றனர்
கோயிலிந்துக் கல்லூரியின்கொடியை நாட்டினர். 36



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழந்தமிழர் பண்புகளைப் பாதுகாக்கவே
பள்ளிசெய்து பாலர்தம்மைப் படிக்கச்சேர்த்தனர்
செழுந்தமிழும் சைவமதம் சேரும்ஆங்கிலம்
சீர்பெருக கல்விவளம் செய்துநின்றனர்
விளங்கிடவே மானிநகர் இந்துக்கல்லூரி
வியப்புநிறை கட்டடங்கள் அமைத்துவென்றனர்
களங்கமில்லாக் கல்விகலை ஊக்கம்காட்டிடும்
கவின்நிறை ஆசிரியருக்குப் பதவிநல்கினர். 37

இந்துதர்மஸாஸ்திர நூலறிவு தந்தனர்
இலங்கிடவே சைவமதப் பற்றும் தந்தனர்
முந்துசைவ தீக்ஷைபெற்று முழுமைபெற்றிட
முத்திநெறி காட்டும்தெய்வ பக்திதந்தனர்
சிந்து தமிழ்வேதமெனும் தேவாரப்பண்
சேர்ந்துசிறுர் பாடவைத்தே பக்திதிளைத்தார்
கந்துகமாம் பந்தாடல் ஆடவைத்தே
களித்து இருகைகொட்டி ஆர்ப்பரித்தார். 38

மானிஇந்துக் கல்லூரி மாட்சிபெற்றிட
மாபெரிய கனவான்கள் மகிழ்ந்துதவினர்
மானிலத்தில் இந்துமதம் தமிழும்ஓங்கிட
மகான்களான பசுபதிச்செட்டியார் அட்வகேட்
ஞானமிகு நாகலிங்கம் காசிப்பிள்ளையும்
ஞாலம்போற்றுபொன் ராமநாத வள்ளலும்
மோனமிகு குமாரசாமி பெரியார்தந்த
மோகனமாம் சேவைதன்னை மறப்பாருண்டோ? 39

ஆறுமுக நாவலரின் அறிவு ரைகளும்
அன்புவிவே சாநந்தரின் போதனைகளும்
கூறும்மானிப் பாய்நகரில் இந்துக்கல்லூரிக்
கோயிலாக்கும் மாட்சிமைக்குக் கொண்டவரேதாம்
வீறுநடை போடும்வீரன் எஸ்கே லோட்டனும்
வியன்மிகும் கேட்முதலியார்தி யாக ராஜாவும்
நீறிலங்கும் பக்திநிரு வாகசபையார்
நெஞ்சாரச் செய்தசேவை மறக்கலாகுமோ? 40

காணிநிலம் தந்தவள்ளல் சங்கரப்பிள்ளை
கனகசபை வாழ்கஎன வாழ்த்துநெஞ்சம்
ஆணிவே ராகநின்ற அரச அதிபர்
அன்புஸேர் ஜோசப் ஹட்ஸன் அத்திபாரமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணிச்சைவ நெறியில்நின்று தமிழரின்பண்பு
பூவுலகில் காக்கும்மானி இந்துக்கல்லூரி
காணும்இடம் யாவிலுமே கலையின்அம்ஸத்தை
காட்டும்திறன் மானிஇந்துக் கல்லூரிக்குண்டு. 41

( மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர்கள் )

ஈழம்போற்றும் யாழ்ப்பாண இந்துக்கல்லூரி
இனியவழி நடத்தும் சான்றோர் இங்கும்வந்தனர்
ஆழத்தமிழ்க் கடலில்ஞான முத்தெடுத்தல்போல்
அதிபராக வீராச்சாமிப்பிள்ளை தேர்ந்தனர்
வேழமென வீராச்சாமிப் பிள்ளை அதிபராய்
வியன்மிகுந்த முதலதிபர் சேவை ஆற்றினர்
வாழுநெறி வகுத்துக்காட்டி வாழ்ந்த அன்னவர்
வடிவுறஒன் பதுமாதச் சேவை யாற்றினர். 42

அன்னவர்எண் கணிதநூலில் ஆசானுக் காசான்
அதிபராக ஆற்றும்சேவை அளவிடற்கரியதோ?
முன்னம் லண்டன் மட்றிக்குலே ஷன்பரீட்சையில்
முந்தும்உப பாடமாகப் போதித்து வெற்றி
மன்னிடவே மானிஇந்துக் கல்லூரிப் புகழை
மானிலத்தில் நாட்டும் வீராச் சாமிப்பிள்ளையை
இந்நிலத்தில் என்றென்றும் இதயம் இருத்தி
இகந்தனிலே வாழ்த்திடுவோம் இனிதேவாழி. 43

இலண்டன் மட்றிக் பரீட்சையிலே
இனியதமிழ்ப் பாடமதை
இலங்கிடவே சித்திபெற்று
இலக்ஷிய மாணவனுய்
துலங்கியவன் யாருமல்ல
தீரன்அவன் வீரசிங்கம்
பலம்மிகுந்த பண்புநிறை
பள்ளியிலே மாணவனும். 44

சான்ருேன் சபாபதிப் பிள்ளை — கலா
சாலைக்கு அதிபனுனன்
ஆன்ருேர்கள் கூறிய நெறியில் — நின்று
அதிபராய்க் கடமை செய்தான். 45

கல்வியில் ஊக்கமும்காட்டி — சித்தி
கல்லூரியில் நிலை நாட்டி
செல்வ நிதிபெற்றுத்தந்தான் — அவன்
சிறப்பாய்க் கடமை புரிந்தான். 46



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபாபதிப் பிள்ளையாம் அதிபர் — மிக்க
சாதுர்ய மானமுதல்வர்
அவாவொடு மாணவர் பயில — தன்னால்
ஆன உதவிகள் செய்தார். 47

ஈராண்டு சேவைக்குப் பின்னர் — அவர்
இளைப்பாற எண்ணியிருந்தார்
சீராண்ட சபாபதிப் பிள்ளை — செய்த
சேவைதனை வாழ்வில் மறவோம். 48

கல்விமானன சிவராவ் — இந்தக்
கல்லூரிக் கதிபரானார்
நல்விதமாய் சேவை செய்தார் — அவர்
நற்சேவை நாமென்றும் மறவோம். 49

( வேறு )

ஓய்வுபெற எண்ணம் கொண்ட
உத்தமர் சபாபதிப் பிள்ளை — பின்னும்
நேயமுடன் அதிபரானார்
நிறைந்த சேவை செய்யலானார். 50

( வேறு )

நல்லதிப ராகச்சபா ரத்ன சிங்கி
நாடிஇந்துக் கல்லூரியில் வந்தமர்ந்தார்
வல்லமைசேர் சேவைகளை செய்துமிளிர்ந்தார்
வளமாகக் கல்விகலை பேணிவென்றார். 51

ராஜபுத்ர ராஜனைப்போல்
கொண்ட தோற்றம்
நாளும் கல்விஞானம் நல்க
நாடும் நாட்டம்
தேஜஸ்நிறை சபாரத்ன
சிங்கி செய்த
தெய்வீகக் கல்விச்சேவை
மறந்திட மாட்டோம். 52



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( வேறு )

ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினைந்தாம் ஆண்டிலே
அதிபராகப் பதவியேற்றார் டி. பி. ஹட்ஸன்
தாயின்அன்புபோல மானி இந்துக்கல்லூரி வாழ
தக்கசேவை செய்தஒரு மிக்கபெரியார். 53

இலண்டன் சர்வகலாசாலைப் பட்டப்பரீக்ஷைக்கே
இலங்கும் மாணவரைத் தோற்றிவெற்றியும் கண்டார்
கலங்கரை விளக்கம்போல ஹட்ஸன் அதிபரும்
கல்லூரியில் நிலையான தொண்டுகள் செய்தார். 54

பழைய மாணவரின் சங்கம் ஸ்தாபிதம் செய்தார்
பள்ளிக்கூடப் பெற்றார் சங்கம்ஸ்தாபிதம் செய்தார்
குழையும் அன்புகொண்டிதயம் குடியமர்ந்தவர்
குவலயத்தை விட்டியற்கை ஹட்ஸன் எய்தினார். 55

குரேசெற்என்னும் பேராசான் அதிபராகினார்
குணசீலன் அவர்கல்விச் சேவையாற்றினார்
திறமான கட்டிடங்க வகுப்பறைகளும்
திருத்தமுறப் புதிதாகக் கட்டியெழுப்பினார். 56

தாரணிதனிலே மானி இந்துக்கல்லூரி
தனித்துவமாம் செல்வாக்கு பெறவேசெய்தவர்
சாரணீயம் கல்லூரியில் சார்ந்துஇலங்கிட
சரித்திரம் படைத்தகுரேசெற் கர்மவீரனே. 57

உண்மையான கிறீஸ்தவராய் இருந்தபோதிலும்
உலகில்சைவம் தமிழ்வளரத் தொண்டுசெய்தவர்
கண்ணிமைபோல் கல்லூரியைக் காத்துநின்றவர்
காலமெல்லாம் கல்லூரிக்காய்க் கழித்துவென்றவர். 58

இந்துஇளைஞர் சங்கமதை ஸ்தாபிதம் செய்தார்
இரஸாயனமும் விஞ்ஞானமும் இவர்தொடக்கினார்
முந்தும் ஒருஆய்வுகூடம் கட்டியெழுப்பினார்
மூதறிஞர் விரிவுரைகள் ஆக்கஉதவினார். 59

முதன்முதலில் மானிப்பாயின் இந்துக்கல்லூரி
முத்தமிழின் சஞ்சிகையைப் புத்தகம்செய்தார்
இதன்பலனாய் எத்தனையோ மாணவர்களும்
எழுத்தாளராய் மிளிர்ந்து சரித்திரம் படைத்தார். 60



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தகராம் திருவலிங்கம் முகாமையாளராய்
விளங்குகின்ற காலத்திலே கல்விமானுன
சித்தம் செயல்மெய்களினுல் அர்ப்பணம்செய்த
சீரிய குணத்தழகன் பரராஜசிங்கம்
எத்தனையோ கல்விகலைத் தொண்டுகள்செய்தார்
ஏந்தலவன் காராள பிள்ளையுடனே
முத்தமிழில் வல்லசிவ பாத சுந்தரம்
முதன்மையான அதிபராக தொண்டுகள்செய்தார். 61

எத்தனையோ புத்தகங்கள் எழுதித்தந்தவர்
ஏற்றம்நிறை கல்லூரி நாட்டம்உள்ளவர்
தத்துவங்கள் ஞானம்கல்வி தருக்க சாஸ்திரம்
தண்டமிழிற் சைவமத நூல்களாக்கினுர்
வித்தகராம் சிவபாத சுந்தரனுரின்
வியன்சேவை வியனுலகில் போற்றிநின்ருர்
தத்துவத்தின் நூலைக்காசி பல்கலைகழகம்
தகுந்ததொரு பாடநூலாய் ஆக்கிற்றையா. 62

ஈழநாடும் ஏழிசையும் செய்ததவமோ
இலங்குதமிழ் அன்னைஈன்ற ஈழத்துச்செல்வம்
வாழும்வகை ஆத்மீக நெறியில்வைத்தே
வாழ்ந்தமயில் வாகனனுர் வந்துசேர்ந்தார்
ஆழியென சைவமத மார்க்கநெறியில்
ஆனந்த கானமதை இணைத்தசெம்மல்
யாழின்நூலைச் செய்துதந்த விபுலானந்த
ஸ்வாமியும் இவரேயெனச் செப்புவாரையா. 63

மாணவரைப் பகிரங்கப் பரீசைஷகளிலும்
மகிழ்ந்து ஆடும்நல்ல விளையாட்டுத்துறையில்
காணரிய சித்திகளைக் கண்டுகளித்தார்
கல்லூரிச் சூழல்தனை நிலைநிறுத்தினுர்
பேணரிய கல்லூரிச் சேவைச்சாதனை
பெரியவராம் மயில்வாகனம் செய்துமுடித்தார்
தாணுமாலயன் தாளைச்சார்ந்து ஆன்மீக
தனித்துறவியானுர் விபுலானந்தஸ்வாமி. 64

( வேறு )

தெம்மாங்கு

வீரசிங்கம்என்னும் தமிழ்வீரனவன் அதிபனுனன்
வியன்தமிழும் ஆங்கிலமும் — நிர்வாகம்
வீறுமிகுந் தோங்கிதே. 65



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழர் மரபின்அணி சீரானவெள்ளைவேட்டி
நந்தமிழர் மரபின்சட்டை — இடுப்பில்
சால்வைவரி தோன்றுமையா. 66

வீறுநடை போட்டுஎங்கள் வீரசிங்கம் வருகையிலே
சீறுபுலி சாந்தமாக — நடக்கும்
சிந்தனைதான் தோன்றுமையா! 67

கல்லூரி நிர்வாகம் சுச்சிதமாய்த் தானிருக்கும்
நல்லாசி கூறிஅன்பாய் — வீரசிங்கம்
எல்லோர்க்கும் அன்புசெய்வார். 68

கண்டிப்பிலும் கண்டிப்பான கண்ணியவான் வீரசிங்கம்
எண்டிசையும் போற்றிசெய்ய — வீரசிங்கம்
தண்டனையைத் தனக்கே தந்தார். 69

பிள்ளைகள் பிந்திவந்தால் பிரம்பாலடி கொடுக்கலாமா?
பிள்ளைகளை அடிக்காமலே — பிரம்பால்
தன்னைத்தானே அடித்தார் முன்னுள் 70

நெஞ்சம் நெகிழுதையா நிகழ்ந்தகதை கூறிடவெ
வஞ்சமில்லா மனமும் கண்கள் — நினைத்தால்
வடிக்குதையா ரத்தக் கண்ணீர். 71

நிர்வாக ஆளுமையில் நிகர்அவர்க்கு அவரேதான்
கர்மவீரன் வீரசிங்கம் — மாணிநகர்
கல்லூரியின் ராஜசிங்கம். 72

கல்வியிலே விசேடசித்தி கலைகளிலே மிக்கநாட்டம்
கல்லூரி விளையாட்டிலே — எத்தனையோ
கேடயங்கள் பெற்றதையா! 72

ஆடல்பாடல் நாடகங்கள் ஆன்மீகப் போதனைகள்
தேடக்கிடைத்திடாத — கலைகள்
தேடியவர் தந்தே வென்றார். 74

சமயகுரவர்நால்வர் சரித்திர இல்லமாக்கி
தமதரும் நிர்வாகத்தால் — போட்டி
தந்துகலை வளர்த்தாரையா. 75

நாடகத்தில் போட்டிவைத்தார் நடிகர்களை ஆக்கிவிட்டார்
ஆடரங்கில் எத்தனையோ — கலைஞர்
அவர்வளர்த்து விட்டாரையா! 76



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரசிங்கம் செய்தசேவை விடியவிடிய கூறலாமே
ஆரவரைப் போல்அதிபர் — கல்வி
ஆயகலைதரும் பெரியார். 77

( வேறு )

விஞ்ஞான மேதைநவ ரத்தினப்பெரியார்
வீரசிங்க அதிபரையே பின்தொடர்ந்தார்
மெய்ஞ்ஞான நெறிகள்தந்தே கல்லூரியை
மேலோங்கச் செய்தார் நவரத்தினப்பெரியார் 78

அன்பளிப்பாய் செனட்டர்நடேசன் தந்தகாணியும்
அன்பர்களின் ஆதரவால் பெற்றகாணியும்
நன்கு பரிபூரணமாய் மானிநகரில்
நல்கி இந்துக்கல்லூரிக்கு சோபிதம்செய்தார். 79

அதிகாரம் செல்லமுத்து அன்பர்கள் கூடி
அழகொழுக வகுப்பறைகள் கட்டித்தந்தார்
துதியாக செல்லமுத்து மண்டபம் என்றே
தூயபெரு நாமமிட்டுப் போற்றி நின்றார். 80

இந்துமகளிர் கல்லூரி ஸ்தாபிதம் செய்தார்
இராஜேந்திரம் மஹாதேவன் துணையும் நின்றார்
முந்தும் மானிஇந்துமகளிர் கல்லூரி என்றே
இனியநாம மிட்டு அதைவளர்த்து வந்தனர் 82

முத்துவேற்பிள்ளை யென்னும் மூதறிஞர் அதிபரானார்
முத்தமிழும் தழைத்ததாத் மதத்துவமும் தழைத்ததையா
பக்தியோடு ஆடல்பாடல் நாடகமும் வளர்ந்ததையா
அத்தனையும் மானிநகர் அருந்தவத்தால் வந்ததையா. 83

சைவமும் தமிழும் கலை விஞ்ஞானம் ஆங்கிலமும்
வையகத்தல் மானிஇந்துக் கல்லூரி மிளிர்ந்ததையா
மெய்வல்லுனர் போட்டி மேவும்கேடயங்கள் பெற்று
உய்து தழைத்ததையா உயர்ந்த இந்துக்கல்லூரி 84

முத்தமிழில் நாடகத்தில் முதன்மைதந்த கல்லூரி
எத்தனையோ கலைஞர்களை எழுத்தாளர் கவிஞர்களை
வைத்தியகலாநிதிகள் வழக்கறிஞர் ஆசிரியர்
தத்துவமேதைகளைத் தந்திந்தக் கல்லூரி 85



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிஇந்துக்கல்லூரி மாண்புமிகும் புகழ்மணக்க
தேனில் வண்டுபோலச்சிறூர் தேடிவந்துகல்விகற்ருர்
ஞானத்தமிழ்ப் பண்புடனே ஞாலமதில் வாழ்வாங்கு
மோனமுடன் வாழுநெறி முத்துவேற்பிள்ளை தந்தார். 86

காணிநிலம் வாங்கிக் கால்பந்துமைதானம்
பேணிவிரிவாக்கினர் பெரியாரான முத்துவேற்பிள்ளை
காணரியநூல்நிலையம் கலாநிதி சின்னத்தம்பி
காணிக்கையாகமானி கல்லூரிக்குத் தந்தளித்தார். 87

கற்றதனுல் ஆயபயன் கடவுளைத்தொழுதல் என்பார்
நற்றவப்பணியாய்ராம நாதனதன் மனமுவந்து
உற்றவொரு பிரார்த்தனைநல் மண்பத்தைஉதவவைத்தார்
இத்தரையில் இராஜலிங்கம் விக்கிரகம்செய்யவைத்தார் 88

ஆசியாபவுண்டேசன் நிறுவனத்தின் உதவியினுல்
ஆய்தகூட விஞ்ஞான உபகரணம் வாங்கிவைத்தார்
பேசரிய பெருஞ்சித்தி பௌதீகத்தில் மாணவர்கள்
நேசமுடன் பெற்றெடுக்க நெஞ்சம்குளிர்ந்துநின்ருர். 89

பாலர்பள்ளிக்கட்டிடத்தை பண்புடனே மானிமஸ்கன்
சீலச்சுப்பிரமணியம் செய்துதர முயற்சிசெய்தார்
காலமெல்லாம் கல்லூரியின் வளர்ச்சியிலேகருத்துக்கொண்டு
மூலகாரணியாம் எங்கள் முத்துவேற்பிள்ளை ஐயா. 90

பாராளும் தமிழின் செல்வர் பண்டிமணிதயுமான
சீரார்ந்த தக்ஷகாண்ட செந்தமிழ்நூல் அச்சேற்றினுர்
பேராதனைமுருகன் கீர்த்தனை எனும்இசைநூல்
ஆராதனைசெய்ய அச்சேற்றித் தந்தசெல்வர். 91

இந்துகலாச்சாரத்திற்கே இக்கல்லூரி அச்சாணி
செந்தமிழின் பண்பிணிற்கே செப்புகின்ற மூலவேராம்
பைந்தமிழின் பாடலுக்கும் ஆடலுக்கும் ஓர்அரங்கம்
முந்தும் தலைமைதந்தார் முத்துவேற்பிள்ளையவர். 92

(வேறு)

(தெம்மாங்கு)

பேராயிரவர் அதிபராய் வந்தார்
பேணிடமானிப்பாய் இந்துக்கல்லூரி
ஒராயிரம் ஆண்டு ஒளியோடுவாழ
ஒவ்வொருகணமும் சிந்தைசெய்தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராமுகம் இன்றிக் கல்லூரிச்சேவை
பக்குவமாக அவர் புரிந்தாரே!
சீராகக் கல்லூரி நிர்வாகந்தன்னை
சிறப்புறச் செய்தாரே பேராயிரவர். 93

ஆறுவகுப்பறை அழகான கட்டிடம்
அன்பாகப்பெற்றோரா சிரியமண்டபம்
கூறும் கல்லூரிவிடு திச்சாலை யெல்லாம்
கொங்கிறீற் கட்டினுல்கட்டிந்தந்தாரே
மாறிலாது விளையாட்டிலே ஊக்கமும்
மன்னுதமிழ் நாடகத்திலே ஆர்வமும்
தேறவரும் கல்வி மாணவர் சித்தியும்
திடவுள்ளத்தில் கொண்டு சேவைசெய்தாரே. 94

## ( வேறு )

கும்பகோணம் தந்தவொரு
அந்தணாளன் அதிபனுக
வந்த திருவேங்கடாச் சாரி கல்வி
தந்தபெரும் பரோபகாரி
நம்பெரிய மானிநகர்
நற்றவத்தால் கல்லூரி
அம்புவியில் காக்கும் உபகாரி – சேவை
தெம்புடனே செய்தசூத்ரதாரி. 95

பழைய மாணவரைக்கூட்டி
பக்குவமாய் மார்க்கம்காட்டி
குழையும் அன்பால்
சாதனைகள் புரிந்தார் — சாரி
இசையில் வல்லவோர் ரஸிகஞானி
விளையும் பயிரை இன்னதென்று
முளையிலே கண்டறிந்து
விசைகொடுத்து ஊக்குவார் — சாரிஅவர்
விதைத்தகல்வி விதைகள் பலகோடி. 96

வீரசிங்கம் நிர்வாகமண்டபம் தனைக்கட்டி
விளங்கவைத்தார் இந்துக்கல்லூரி — என்று
களங்கமில்லா வேங்கடாச்சாரி
தீரமுடன் தொழிற்கூடம் தூயமஸ்கன் ஸ்தாபனத்து
சுப்ரமண்யம் கட்டித்தர முயன்றார் — அதில்
துப்பரவாய்ச் சித்திபெற்று வென்றார். 97



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ நாடகங்கள்
எழுதியவர் மேடையேற்றி
முத்தமிழைக்காத்த எங்கள்சாரி — கலை
வித்தகராம் திருவெங்கடாச்சாரி
மெத்தநல்ல நாடகங்கள்
மேடையேற்றிக் கொழும்பினிலே
அத்தனையும் பணமாக்கித்தந்தார் — வாழ்வில்
சித்தமெல்லாம் மானிப்பாயில் வைத்தார். 98

அழகான இரண்டுமாடி
அடுக்கு மாளிகைகள்போல
எழிலான கட்டிடம் அமைத்தார் — சாரி
என்றும் எங்கள்மனத்தினிலே நிலைத்தார்
வளமான வாழ்வுவாழ
வண்டமிழில் தாவரநூல்
வரைந்துதவி அறிவுஞானம்தந்தார் — சாரி
நிரந்தரமாய் எம்மனத்தில் அமர்ந்தார். 99

(வாழி)

பல்லாண்டு பல்லாண்டு
வாழியிந்துக் கல்லூரி
பக்குவமாய்க் கல்விச்சேவை செய்தே
நல்லவரை உருவாக்கி
நல்லவைகள் செய்திடவே
நானிலத்தில் பல்லாண்டு வாழி. 100

எல்லாரும் இன்புற்று
இருந்திடவே சைவமதம்
ஏழுசையும் தமிழ் மொழியும் வாழி
பல்லாண்டு பல்லாண்டு
பல்லாயிரத்தாண்டு
பாரில் இந்துக்கல்லூரி வாழி.

"சுபம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org